# தொழிலாளர் மக்களாட்சி

2008 அக்டோபர் - 01-15 - மாதமிருமுறை - மலர் - 1 இதழ்-4 மார்க்சிய - லெனினிய - மாவோவிய அரசியல் ஏடு விலை 10.00

**ராஜீவை கொன்றவர்களை மன்னிக்கலாமா?** காங்கிரஸ் - பார்ப்பன கும்பல் அலறல்

## ராஜீவின் ஊழலை மன்னிக்க முடியுமா?



புகைப்படம் - நன்றி, நக்கீரன் வார இதழ்

ரௌடி வீரமணியின் அண்ணனின் உருவச்சிலை திறந்து வைத்தார் அப்போதய தமிழகத்தின் அமைச்சராக இருந்த எஸ்.டி சோமசுந்தரம் அப்போது பாசிச ஜெயாவின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருந்தது.

வீரமணியின் அண்ணனும் ரௌடிதான். ரௌடி கோஷ்டிகளின் மோதலிலே வீரமணியின் அண்ணனும் மாண்டு போனான். ஆனாலும் ஓர் ரௌடியின் உருவச்சிலையை திறப்பதில் தமிழக அமைச்சருக்கு எவ்வித கூச்சமும் அப்போது ஏற்படவில்லை. ஓர் ரௌடியின் சிலையைப் போய் ஓர் அமைச்சர் திறப்பதா என தமிழக மக்கள் அப்போது வினவினர். வீரமணியின் அண்ணனின் சிலையை திறப்பது பாவமா? அம்மாவின் பொற்கால ஆட்சியை காப்பாற்றி வரும் தொண்டர் படைகளின் தலைவனை குண்டர் படைத்தலைவனாக சித்தரிப்பது அம்மாவின் ஆட்சிக்கு எதிரான சதி, அவர் குண்டரா, ரௌடியா என்பதா முக்கியம், அம்மாவின் ஆட்சியை காக்க உதவுகிறாரா என்பதே முக்கியம். என தன் சிலைதிறப்பு நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு உணர்த்திப் போனார் எஸ்.டி.எஸ். ஒருவன் கரைவேட்டி கட்டியிருப்பவன் ரௌடியா, தெருப்பொறுக்கியா என்பது முக்கியமல்ல அம்மாவின் ஆட்சிக்கு அடியாளாக, கைத்தடியாக இருக்கிறானா என்பதே முக்கியம். அம்மாவின் ஆட்சிக்கு அடியாளாக இருப்பவனே தேசபக்தன், மற்றவன் தேசவிரோதி, இதுதான் பாசிச ஜெயாவின் கொள்கை, பாசிஸ்ட்களின் அனைவரின் கொள்கையும் இதுதான். ஜெயாவின் பழைய கைத்தடிகளான காங்கிரசும் ஜெயாவும் துவங்கியிருக்கின்றனர். பார்ப்பன பாசிச ஆட்சியை மீண்டும் நிறுவமுடியுமா என கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

சிங்கள பேரினவாத அரசிற்கு ராணுவ உதவியும், ராஜதந்திர உதவியும் அளிக்கும் இந்திய அரசை கண்டித்தும், இலங்கையில் போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தியும், தமிழக திரைப்படத்துறையினரும், தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்கள் ராமேஸ்வரத்தில் பேரணியும், பொதுக்கூட்டமும், அக்டோபர் 19அன்று நடத்தினர் அக்கூட்டத்தில் பேசிய இயக்குனர் பாரதிராஜா,சீமான், அமிர் ஆகியோர் ராஜீவ் கொலையை நியாயப்படுத்தி பேசியதாகவும், விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசியதாகவும் கூப்பாடு போட்ட காங்கிரஸ் கும்பல், அவர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என காங்கிரசும் பாசிச ஜெயாவும் ஊளையிட்டனர். இந்நிலையில் தனித்தமிழ்நாடு கோரிக்கையை முன் மொழிந்ததாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. வையும், கண்ணப்பனையும் கைது செய்ய வேண்டும் என காங்கிரஸ் நெருக்கடி கொடுக்க மிரண்டு போன முதல்வர் கருணாநிதி வை.கோ. கண்ணப்பன், இயக்குனர்கள் அமிர் மற்றும் சீமானை கைது செய்து சிறையில் அடைத்தார். தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தப்பின்னரும் திருமாவளவனையும் , பாரதிராஜாவையும் கைது செய்து சிறையிலடைக்க வேண்டும் என பார்ப்பன ஜெயாவும். காங்கிரஸ், சோ, இந்துபத்திரிக்கை உள்ளிட்ட கும்பல் தங்கள் தமிழின உரிமைக்கெதிரான குரலை நிறுத்தாமல் ஒலித்தனர். இந்நிலையில் தான் சென்னைக்கு அருகே ராஜீவ் காந்தியின் சிலை உடைக்கப்பட்டது. ராஜீவின் பிணத்தை வைத்து ஓட்டுக்கேட்ட காங்கிரஸ், ஜெயா கும்பல், உடைக்கப்பட்ட ராஜீவ்சிலையை வைத்து ஏதாவது பிழைப்பு நடத்த முடியுமா என முயன்று தோற்றுப் போனது. ஆயினும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகமே ஓங்கி ஒலிக்கும் இவ்வேளையில்" ராஜீவை கொன்றவர்களை ஆதரிப்பவர்கள் தேச விரோதிகள்.ராஜீவை கொன்றவர்களை மன்னிக்க முடியுமா? என மீண்டும் ராஜீவ் புராணத்தை பாடத்துவங்கியிருக்கிறார்கள்

காங்கிரசார்.அப்படி புலம்பும் காங்கிரஸ் மற்றும் பார்ப்பன கும்பலை பார்த்து, தமிழக மக்கள் வேறுவிதமாக கேட்கிறார்கள்.

ராஜீவ் செய்த ஊழலை மன்னிக்க முடியுமா? காங்கிரஸ் கட்சி செய்த ஊழலை மன்னிக்கத்தான் முடியுமா என கேட்கின்றனர். ஆனால் எஸ்.டி.சோமசுந்தரம் குரலில் ஒலிக்கின்றனர் காங்கிரசார், ஒரு ரௌடியின் உருவச்சிலையை திறப்பதில் எவ்வித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் இருந்த எஸ்.டி. எஸ்ஸைப் போல், தமிழக மக்களும் இருக்க வேண்டும் என எதிர்பாக்கிறது காங்கிரஸ் ராஜீவ் செய்த ஊழல் முக்கியமல்ல, அவர் செய்த தியாகத்தை பாருங்கள் என்கின்றன காங்கிரஸ் பட்டாளங்கள்ஆனால் ஊழல் செய்து பணத்தை சேர்ப்பதற்காகவே தியாகம் செய்த ராஜீவ் குடும்பத்தை, காங்கிரஸ் கட்சியை ஆதரிக்க முடியுமா?புறக்கணிக்கத்தான் முடியும் என்கின்றனர் தமிழக மக்கள்.

ராஜீவை கொன்றவர்களை மன்னிக்க முடியுமா என்று பார்ப்பன கும்பல் கேட்டால் ராஜீவின் ஊழலை மன்னிக்க முடியுமா? மறக்கத்தான் முடியுமா? என எதிர் கேள்வி கேட்கின்றனர் தமிழக மக்கள்.

ஆம் ராஜீவும் காங்கிரஸ் கும்பலும் செய்த ஊழலை மன்னிக்கத்தான் முடியுமா? மறக்கத்தான் முடியுமா?மிஸ்டர். கிளின் என்ற பிரச்சாரத்தோடு அறிமுகமான ராஜீவ் காந்தி போபர்ஸ் ஊழலால் அம்பலப்பட்டுப் போனார். இந்திரா காந்திக் கொலைக்குப் பிறகு எண்ணற்ற சீக்கியர்களை கொன்று குவித்தனர் காங்கிரஸ்ஸார். அதற்கு பதிலளித்த ராஜீவ் காந்தி , " மிகப் பெரிய ஆலமரம் வீழும்போது அதன் வேர்கள் சில அதிர்வுகளை ஏற்படுத்ததான் செய்யும்". என திமிராகப் பேசினார்.

தமிழகமே எதிர்த்தும் இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பினார்.பின் தோற்கடிக்கப்பட்டு திரும்பி வந்த இந்திய அமைதிப்படையை அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி கொலைப் படையை வரவேற்க மாட்டேன் என்று கூறியதை மறக்கத்தான் முடியுமா.

155 எம்.எப்.எச் ரக போபர்ஸ் பீரங்கி வாங்கியதில் ரூபாய் 650 மில்லியன், ஊழல் மூலம் கைமாறியதாக 1987-ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டு வானொலி அறிவித்தது. ராஜீவும், ராஜீவ் குடும்பத்தாரும், நண்பர்களும் பல கோடி ரூபாய் அன்னியச் செலாவணித் தொகை கமிஷனாக பெற்றனர். காங்கிரஸ் கும்பலால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டு நடவடிக்கைக் குழு ராஜீவிற்கு இதில் சம்பந்தமில்லை என ஒரு பொய்யான அறிக்கையை அளித்தது. அதே நேரத்தில் போபர்ஸ் பேரத்தில் பலகோடி ரூபாய் முறை கேடுகளும், ஊழலும் நடந்ததை தணிக்கை அதிகாரியின் அறிக்கை அம்பலப்படுத்தியது. போபர்ஸ் ஊழலால் காங்கிரஸ் மக்களால் துடைத்தெறியப்பட்டது. தனிப் பெரும்பான்மையை இன்று வரை அது பெற முடியவில்லை, இன்னும் போபர்ஸ் வழக்கு முடியவில்லை. இப்படி ஊழல் செய்த ராஜீவின் செயலை மன்னிக்க முடியுமா என கேட்கின்றனர் தமிழக மக்கள். போபர்ஸ் விஷயத்தில் பெரிய அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டாம் என சுவிட்சர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சருக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கடிதம் எழுதியதை தமிழக மக்கள் மறக்கத்தயாரில்லை. இப்படி ஊழல் செய்த ராஜீவை, ராஜீவின் குடும்பத்தை, காங்கிரஸ் கட்சியை மன்னிக்க முடியுமா என்று கேட்கின்றனர் மக்கள். ஊரை அடித்து உலையில் போட்ட விஷயத்தில் ரவுடி வீரமணியின் அண்ணனும் ஒன்றுதான்,பாசிச இந்திராவின் மகன் ராஜீவ் காந்தியின் ஒன்றுதான் என்கின்றனர் மக்கள்.அவர் முன்னாள் பிரதமர் என்பதால் தனிச்சலுகைக் கோரமுடியுமா ?சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று தானே நமது அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை மாண்பு. மாண்டுபோனவர் மாண்புமிகு முன்னாள் பிரதமர் என்பதால் அவர் செய்த ஊழலுக்கு தியாகிப்பட்டம் கோரமுடியுமா?அதை அனுமதிக்கத்தான் முடியுமா? என கேட்கின்றனர் தமிழக மக்கள் ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமான ஓர் குற்றவாளி, இன்றைய தனியார் மய விளைவுகளுக்கு முன்னோடி அவரின் காங்கிரஸ் கட்சி, பல ஊழலுக்கு சொந்தமான கட்சி பல்ராம் ஜாக்கரின் கால்நடைத் தீவன ஊழல், பங்கு பத்திர ஊழல் பெரும்பான்மை பெற எம்.பி.க்களுக்கு நரசிம்மராவ் லஞ்சம் கொடுத்த ஊழல், அணு ஆயுதம் ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க எம்.பி.களுக்கு லஞ்சம் கொடுத்து அம்பலப்பட்டுப் போன சோனியாவின் தலைமையிலான காங்கிரஸ் செய்த ஊழல் என ராஜீவும் அவரது காங்கிரஸ் கட்சியும் செய்த, செய்து கொண்டிருக்கிற கணக்கற்ற ஊழலைத்தான் இந்த நாட்டுக்கு செய்த தியாகம் என்றால், காங்கிரஸ் பேரியக்கத்தை விட மிக அதிகஅளவில் தமிழகத்தில் தியாகிகள் வாழ்ந்து வருகின்றனர்.அவர்கள் தான் சமூகத்தில் கிரிமினல்களாக உலாவரும் அண்ணன்கள், வள்ளல்கள், தளபதிகள், ரௌடிகள், தெருப்பொறுக்கிகள். இப்படி ஊழலில் திளைத்த காங்கிரஸ் கட்சியின் தலைவியான சோனியாவின் கருணையை எப்படி நம்பமுடியும், சிறையில் இருக்கும் நளினிக்கு உயிர்பிச்சை கொடுத்தாக சொல்லப்படும் சோனியா, கணக்கற்ற ஈழத்தமிழர்களை, பெண்களை, குழந்தைகளை, இளைஞர்களை, ஏன் ஈழத்தமிழர்களையே பூண்டோடு அழிக்க ஆயுதங்களையும், ராடர்களையும், பொருளாதார உதவிகளையும் இந்திய ராணுவ வீரர்களையும் சிங்கள பேரினவாத அரசிற்கு,அன்னை சோனியா கொடுக்கும் போது, அவரின் தியாகத்தை எப்படி நம்புவது என கேட்டனர் இயக்குனர்கள், சீமான், அமீர் ஆகியோர் , உடனே பிரிவினைவாத, தீவிரவாத ஒப்பாரி வைத்த காங்கிரஸ் மற்றும் பார்ப்பன கும்பல் உடனே பாரதிராஜாவை சீமானை, அமீரை , வை.கோவை, கண்ணப்பனை கைது செய் என கோரிக்கைகளை வைத்து புண்ணாக்கு காரணம் காட்டி தமிழக மக்களை ஏய்க்கப் பார்க்கின்றனர் அது ராஜீவை கொன்றவர்களை மன்னிக்க முடியுமா?ராஜீவின் தியாகத்தை மறக்க முடியுமா? என்பது தான். நாமும் அவர்கள் பாணியிலேயே திருப்பியடிப்போம் காங்கிரஸ் மற்றும் பார்ப்பன கும்பலை பார்த்து. என்ன இருந்தாலும் ராஜீவ் காந்தி செத்து விட்டார். அவர் செத்து விட்டார் என்பதால் ராஜீவ் காந்தியின் ஊழலை மன்னிக்க முடியுமா? ஊழல் கும்பலான காங்கிரஸ் கும்பலை அரசியல் அரங்கில் அனுமதிக்கத்தான் முடியுமா?

**-செங்கோல்**

**4ம் பக்க தொடர்ச்சி**

ஆட்சிக் கட்டிலில் பா.ஜ.க. ஏறும் பட்சத்தில் இந்திய இராணுவம் முழுமையாக இந்து இராணுவமாக, நாஜிப் படையாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதற்கான அடித்தளமே மாலேகான் குண்டுவெடிப்பு இதற்கு இந்தியாவின் உழைக்கும் மக்களையே நாஜிக் படையாக மாற்ற எத்தனைக்கிறது. பின்தங்கிய பொருளாதார நிலையிலிருந்து தான் கடைநிலைச் சிப்பாயாக பணியாற்ற இந்திய இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றுகின்றனர் இந்தியாவின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்.

இவர்கள் இந்துமத வெறி பாசிசத்திற்கு ஆட்படாமல், இவர்களை பிரித்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் கார்கில் போரில் இவர்களுக்காக உருவாக்கப்பட்ட, ஊழல் கறை படிந்த சவப்பெட்டி வேறு வழியில்லாமல் நமக்கானதாக மாறிவிடும், இந்து இராணுவத்திற்கெதிரான மக்கள் படையை வரலாறு நிர்பந்திக்கிறது, நிர்பந்தத்திற்கு அடிபணிவோம், மார்ச்சிய - லெனினிய மாவோவிய கொள்கையின் கீழ் அணிதிரள்வோம்.

**- செவ்விழி**

**கடிதத்தொடர்புக்கு :**

ஆசிரியர்.தொழிலாளர் மக்களாட்சி,
எண்.45,சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை,
சைதை, சென்னை-15
.அலைபேசி-9380976378,9841168164.
E-mail:makkalatchi@yahoo.com

## மாலேகான் குண்டு வெடிப்பில் இந்திய இராணுவ அதிகாரிகள்

## ஈழத்தமிழர்களைக் கொல்லக் கூலிப்படையாக இந்திய ராணுவம்

# தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்ல சிங்கள ராணுவத்திற்கு போர்க்கருவிகளை வழங்கும் இந்திய இராணுவம்

தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் சிங்கள ராணுவத்தளபதி பொன் சேகாவையும், அதிபர் ராஜபக்சேவையும் கைது செய்ய செய்ய வேண்டும் என தமிழ் தேசிய முன்னணி என்ற அமைப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி பிரச்சார இயக்கமும், ராமேஸ்வர கடற்கடைத்தளத்தை முற்றுகையிடும் போராட்டம் ஒன்றையும் அறிவித்திருக்கிறது. தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பும், அவர்களுக்கு உரிய நட்ட ஈடும் வழங்க வேண்டும் என தமிழக மக்கள் உரிமை இயக்கம் என்ற அமைப்பு சென்னை உயர்நிதி மன்றத்தில் பொது நலன் வழக்கு ஒன்றை தொடுத்திருக்கிறது. மனுவை விசாரித்த நீதிமன்றம் இது பற்றி பதிலளிக்க வேண்டும் என மத்திய–மாநில அரசிற்கு தாக்கிது அனுப்பியிருக்கிறது. ராஜீவ் காந்தியை கொன்றதாக சொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்தது போல், 600 தமிழக மீனவர்களுக்கு மேல் கொலை செய்த சிங்கள இராணுவத்தினரை கைது செய்ய வேண்டும்.மேலும் அதை தடை செய்ய வேண்டும் என வேலூர் மாவட்டம் இராணிப் பேட்டையை சேர்ந்த மோகன் சுகுமார் என்பவர் ஓர் வழக்கை தொடுத்துள்ளார். சிங்கள ராணுவத்திற்கு பயிற்சி, ஆயுத உதவி ஆகியவற்றை இந்திய அரசு நிறுத்த வேண்டும் எனவும் தன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



**தமிழக மீனவர்களை கொல்ல பயிற்சியில் ஈடுபடும் சிங்கள இராணுவம்**

மாலேகானில் குண்டு வெடிப்பை நிகழ்த்தியது இந்திய இராணுவத்தை சேர்ந்த உயர் அதிகாரிகள் என்ற செய்தி வெளிவந்து கொண்டிருக்கும் சூழலில் தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் சிங்கள ராணுவத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் இந்திய அரசு எடுக்காதது தமிழக மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மாலோகானில் குண்டு வெடிப்பு நிகழ்த்திய இந்து இராணுவ அதிகாரிகளை கைது செய்யும் போது,தமிழக மீனவர்களை கொன்று குவிக்கும் சிங்கள இராணுவத்தை ஏன் கைது செய்யக்கூடாது என தமிழக மக்கள் கேள்வி எழுப்புகின்றன. தமிழக மீனவர்கள் சுடப்படும் விஷயத்தில் தேசவிரோதியாக, மக்கள் விரோதியாக காங்கிரஸ் அரசு செயல்படுவதை தமிழக மக்கள் உணரத் தொடங்கியிருப்பதன் மூலம் தமிழக மீனவர்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்படும் விஷயம் பல்வேறு முடிவுகளை நோக்கி மக்களை தள்ளுகிறது.தமிழக மீனவர்கள் சுடப்பவதும், அவர்கள் உடன் வேலைநிறுத்தம் செய்வது, கடலில் மீன்பிடிக்க செல்லாமல் இருப்பதும். இந்திய அரசிற்கும் தமிழக அரசிற்கும் மிகவும் வசதியான போராட்டமாகி விடுகிறது. அதனால் எவ்வித பாதிப்பிற்கும் இந்திய அரசு ஆளாகவில்லை. மீனவர்களுக்கு அதிக அளவில் பொருளியல் இழப்பு ஏற்படுகிறது. கடலில் மீன் பிடிக்கச் செல்ல மாட்டோம் என்ற தமிழக மீனவர்களின் போராட்டம், சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டை எவ்விதத்திலும் நிறுத்தவில்லை,மேலும் ஈழத்தமிழர்களைக் கொல்ல 265க்கும் மேற்பட்ட இராணுவ உயர் அதிகாரிகளை சிங்கள இராணுவத்திற்கு கூலிப்படையாக அனுப்பும் இந்திய அரசையும், தமிழக மீனவர்களையும், ஈழத்தமிழர்களையும் கொல்ல போர்க்கருவிகளை அனுப்பும் இந்திய அரசின் செயலையும் கண்டிக்கும் விதமாக அப்போராட்டம் அமையவில்லை. இந்நிலையில் சிங்கள பேரினவாத அரசிற்கு துணை நிற்கும் இந்திய அரசை கண்டிக்கும் விதமான அரசியல் போராட்டமாக அவை மாற்றியமைக்க பட வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் பாதிப்படையாமல் இருக்க தொழில் பாதுகாப்புப் படையை அனுப்பும் இந்திய அரசு தமிழக மீனவர்களின் உயிரையும், உடமையையும் காக்கத் தவறுவதன் மூலம் தான் எந்த வர்க்கத்தின் பிரதிநிதி என்பதை நிறுவுகிறது.

போர்குணமிக்க தமிழக மீனவர்கள் ஸ்டெர்லைட் என்னும் ஏகாதிபத்திய நிறுவனத்திற்கு தேவையான தாமிரத்தை ஏற்றி வந்த கப்பலை, தூத்துக்குடியில் நடுகடலில் நடுஇரவில் மறித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்ட வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் மீனவர்கள். அவர்கள் இதுவரையில் நம்பி இருக்கும் ஓட்டுக் கட்சிகளின் மீனவர் அணி என்பது மீனவர்களின் வாழ்வை இருளாக்கும். மா.லெ.மாவோவியத்தால் வார்த்தெடுக்கப்படும் மீனவர் படை மட்டுமே ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ளும் சிங்களப் பேரினவாத இராணுவத்தை எதிர்கொள்ளும், அதற்கு துணை போகும் இந்திய அரசை எதிர்கொள்ளும் மீனவர்கள் தங்கள் கையில் இருக்கும் துடுப்பு பெரும் படகின் வேகத்தை விரைவுப்படுத்த மட்டுமல்ல மீனவத் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற தேவையான போராட்ட ஆயுதம் தங்கள் கைகளில் இருப்பதை சொல்லவும் வேண்டுமோ?

**- தமிழ்**

2008 அக்டோபர் 01-15, THOZHILALAR MAKKALATCHI,Tamizh Fortnightly,RNI TC No.TNTAM/17828/17.12.07,R.Dis.No.2265/07



# இந்து பயங்கரவாதிகளாக லெப்டினன்ட் கர்னல்கள்

# இந்து இராணுவம்

# நாஜிப் படையின் இரண்டாம் வருகை

இந்திய இராணுவத்தில் 19.550 லெப்டினன்ட் கர்னல்கள் பணியாற்றுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. நேரடியாக போரை வழி நடத்தும் ஆற்றல் படைத்தவர்கள் இவர்களே, எதிரி நாட்டினர் இந்தியாவில் தாக்குதல் நடத்தினால், அதை எதிர் கொள்வதற்காகவும், இயற்கை பேரிடர்களில் இருந்து மக்களை காப்பாற்றுவதற்காகவும் உயிரை துச்சமென



புகைப்படம் -நன்றி.ஜூவி

கருதி பணியாற்றுவதாகவும் மக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்ட இந்திய இராணுவம், சொந்த நாட்டு மக்களை கொல்வதற்கேதுவாக ஆர்.எஸ்.எஸ்.என். சித்தாந்தத்தை அமுல்படுத்த உதவும் அதிகாரப்பூர்வ, அடியாள் படையாக அரசுப் படையாக உருமாற்றம் அடைந்திருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது. அப்படி அம்பலமாகியுள்ள அதே நேரத்தில், மிகப்பெரிய பாசிச தாக்குதலுக்கு இந்தியாவின் உழைக்கும் மக்களும், சிறுபான்மை மக்களும் தயாராக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை ஒலியையும் சேர்த்தே ஒலித்திருக்கிறது.மராட்டிய மாநிலம் மாலேகானில் செப்டம்பர் 29 அன்று குண்டு வெடித்தது. 6பேர் பலியானார்கள் பலர் காயமுற்றனர். இதற்கு இஸ்லாமிய பயங்கரவாதிகள் தான் காரணம் என ஊடகங்களும் பார்ப்பன கும்பலும் ஓலமிட, இந்த குண்டு வெடிப்பை இந்து பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர் என்பது மராட்டிய அரசின் முதற்கட்ட விசாரணையில் அம்பலமாகியுள்ளது. வி.எச்.பியை சேர்ந்த பெண் சாமியாரும். தற்போது பணியில் இருக்கும் ராணுவ உயர் அதிகாரிகளும், ஓய்வு பெற்றவர்களும் இந்த குண்டு வெடிப்பில் பங்கேற்றிருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது. லெப்டினண்ட் கர்னல் ஸ்ரீகாந்த் புரோகித், ஓய்வு பெற்ற மேஜர் ரமேஷ் உபாத்யா மற்றும், பெண் சாமியார் பிரக்யா, மகந்த் தயானந்த பாண்டே ஆகியோர் இச்சதித்திட்டத்தில் மூளைகள் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். கும்பலின் நீண்ட கால கனவான இந்து ராஜ்ஜியத்திற்கான அதன் பயங்கர சதி திட்டம் தற்போது ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறது மாலேகான் மட்டுமல்லாது வேறு பல குண்டு வெடிப்புகளிலும் இந்து பயங்கர வாதிகளின் கைவரிசை வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதிகபட்சமாக 26 குண்டு வெடிப்புகளை இந்து பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டள்ளது. உலகின் மிகப் பெரிய இரண்டாவது ராணுவம் என பரப்புரை செய்யப்பட்ட இந்திய ராணுவம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் ஊடுருவலுக்கு ஆட்பட்டிருப்பது.ஹிட்லரின் நாஜி ராணுவத்தின் இரண்டாம் வருகையாக, மலரப் போவதை மக்கள்நலனில் அக்கரை உள்ள எவரும் மறுப்பதற்கில்லை. இயேசுவின் இரண்டாம் வருகை நிகழ்கிறதோ இல்லையோ ஆனால் நாஜீ ராணுவத்தின் இரண்டாம் வருகை இதோ கண் முன தெரிய துவங்கியிருக்கிறது.

இந்தியாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டின் தாக்குதலிருந்து மக்களை, காத்து வருவதாக சொல்லப்படும் இந்திய ராணுவம் தற்போது இந்து மதவெறி பாசிசத்தின் பாசறையாக மாறியுள்ளது. மக்களின் வரிப்பணத்தின் பெரும் பகுதியை ஏப்பம் விடும் இந்திய இராணுவம், இனியும் நம்பத்தகுந்தது என எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமா? காவல் துறை, சிறைத்துறை, நீதித்துறை நிர்வாகத்துறை அனைத்தும் மக்களிடம் ஊழல் முறைகேடுகளினால் அம்பலப்பட்டுள்ள நிலையில், கட்டுக்கோப்பிற்கு பேர் போனது என கதையளக்கப்பட்டு வந்த இந்திய இராணுவம், பார்ப்பன இந்துமதவெறி பாசிசத்தின் ஏவல் படையாக தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது . தற்போது ஒரு சில ராணுவ உயர் அதிகாரிகள் மட்டுமே அகப்பட்டுள்ளனர். எத்தகைய தொரு வலைப்பின்னால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை.

ஆயினும் இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருப்பதை கண்டிக்கிறார் குஜராத் முதல்வர் பாசிச மோடி, மோடியின் பேச்சுக்கு பார்ப்பன கும்பல் எதுவும் வாய்திறக்கவில்லை. பயங்கர வாதிகளுக்கு மோடி ஆதரவுத் தருகிறார் என எந்த பார்ப்பன ஊடகமும் வாய் திறக்கவில்லை. மாறாக, தீவிரவாதத்தை மதத்துடன் இணைக்கக் கூடாது. தீவிர வாதம் வேறு மதம் வேறு அதில் இந்து தீவிரவாதம், இஸ்லாமிய தீவிரவாதம் என பிரிக்க முடியாது என தற்போது பசப்புகின்றனர். விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவின் தலைவர் தமிழ் செல்வன் சிங்கள பேரினவாத அரசால் கொல்லப்பட்ட போது, இறங்கப்பா தெரிவித்த கருணாநிதியை கண்டித்து பயங்கரவாத பீதியூட்டிய பார்ப்பன கும்பல் ராணுவ அதிகாரிகள் இந்து பயங்கரவாதிகளாக மாறி இருக்கும் செயலை ஆதரிக்கும் சக்திகளை கண்டிக்க மறுக்கின்றனர். மோடி,பால் தாக்கரே,உமாபாரதி, அத்வானி என அனைவரும் இராணுவ அதிகாரிகளின் கைதை எதிர்க்கின்றனர். இந்து பயங்கரவாதிகளின் அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதாக ஓலமிடுகின்றனர். அதிநவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி குண்டு வெடிப்பை நிகழ்த்தி மக்களிடம் ஆர்.எஸ்.எஸ். கும்பல் அம்பலப்பட்டுப்போனாலும் காங்கிரஸ் மீதான மக்களின் அதிருப்தி மூலம் மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என கனவு காண்கிறது. அக்கனவு நனவாகும் வாய்ப்பில்லை. அப்படி

தொடர்ச்சி பக்கம் 2ல்

OWNED AND PUBLISHED BY XAVIER KABILAN,FORM NO.8,MUNUSAMY STREET, BHARATHI BLOCK,JAFFERKHAN PETTAI,CHENNAI -83.
AND PRINTED BY K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS,NO.182,BELLS ROAD, CHEPAKKAM,CHENNAI -5,EDITOR-SENGOAL.